மருத்துவர் இப்பணியினை செயல்படுத்தி வந்தார். இந்த நடமாடும் ஊர்திக்கு தனி விரிவாக்க கால்நடை உதவி மருத்துவர் நியமனம் தொடர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. டாக்டர் இளங்கோவன் என்பவர் 1981 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 17 ஆம் நாள் அன்று நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

(ஆ) மேற்கண்ட சூழ்நிலையில் நடமாடும் ஊர்தி செயல்பட்டு வருவதால் இப்பணி மீண்டும் தொடரப்படுமா என்ற நிலை எழவில்லை.

(இ) கேந்திர கிராம கால்நடை உதவி மருத்துவர் கூடுதல் பணி புரிந்தாலும் இப்பணி சிறப்பாக நடைபெற தக்க எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதற்கென தனியே தற்போது டாக்டர் நியமனம் செய்யப்பட்டுள்ளதால் இப்பணி இன்னும் சிறப்பாக நடைபெறும்.

வாக்காளர்களுக்கு அடையாள அட்டை வழங்கும் திட்டம்.

*குறுகியகால வினா எண். 8— திரு. மி. வின்செண்ட் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மத்திய அரசு வாக்காளர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கும் திட்டம் உடனடியாக அமுல் நடத்தப்படும் என்று அறிவித்துள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் என்றால் வருகின்ற நகராட்சி, பஞ்சாயத்து தேர்தல்களில் அடையாள அட்டை வழங்கும் திட்டத்தை அரசு அமுல் நடத்துமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) : இத்திட்டத்தை உள்ளாட்சித் தேர்தல்களில் உடனடியாக பின்பற்றும் உத்தேசம் இல்லை.

திரு. மி. வின்செண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, நாடாளுமன்ற, சட்டமன்ற தேர்தல்களுக்கு, வாக்காளர்களுக்கு அடையாள அட்டைகளை வழங்க இந்திய தேர்தல் குழு தமிழக தேர்தல் அதிகாரியை கேட்டுள்ளதா ? கேட்டிருந்தால் இந்தப் பணி எந்த ஆண்டுக்குள் முடிவடைய வேண்டுமென்று கேட்கப்பட்டுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற, நாடாளுமன்ற தேர்தல்களுக்கு எல்லா வாக்காளர்களுக்கும் புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டைகள் வழங்க வேண்டுமென்று இந்திய தேர்தல்குழு, தமிழக தேர்தல் அதிகாரியை கேட்டுள்ளது.

இது இந்த ஆண்டிலே துவங்கி, வருகின்ற 1984 ஆம் ஆண்டிலே முடிவடையும்.

1981 மார்ச் 5]

திரு. மி. வின்செண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, அடையாள அட்டைகள் வழங்குவதற்காக மத்திய அரசு விஜிலன்ஸ் கமிஷன் ஒன்று நியமித்து இருந்ததே, அதனுடைய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இந்த அடையாள அட்டைகள் எவ்வாறு தயாரித்து வழங்குவது என்பது குறித்து ஒரு கண்காணிப்புக் குழு விஜிலன்ஸ் கமிஷன் நியமிக்கப்பட்டது, அறிக்கையை அரசுக்கு அனுப்பியுள்ளது. அது அரசினுடைய பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் தேர்தல் நடைபெறும் என்று சொல்லி பல்வேறு கட்டங்களிலே அவைகள் ஒத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. இந்திய அரசாங்கம் ஜனத் தொகை கணக்கு எடுக்கிற காரணத்தினாலே தேர்தல் நடைபெறுவதற்குத் தடை விதித்து இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஜனத் தொகை கணக்கெடுப்பு இந்த மாதத்திலே நிறைவேற்றப்பட்டு விடும். ஆகவே இனியாவது நகராட்சி, ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்களுக்கான தேர்தலை இந்த அரசு எப்போது நடத்துவார்கள் என்பதை திட்டவட்டமாக இப்பேரவையின் மூலமாகத் தமிழ்நாட்டு மக்களுக்கு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி அடையாள அட்டையைப் பொறுத்தது; ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தேர்தலைப் பற்றிக் கேட்கிற காரணத்தினாலே உங்களுடைய அனுமதியோடு பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏற்கனவே தமிழகத்திலே உள்ளாட்சி, நகராட்சித் தேர்தல்களை நடத்த வேண்டுமென்று தான் இந்த அரசு 1980 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலே எடுத்துச் சொன்னது. ஆனால் பிப்ரவரி மாதத்திலே யாரும் எதிர்பாராத வண்ணம் இந்த அரசை கலைத்து விட்டார்கள். அதற்குப் பின்பு தேர்தலை நடத்த வேண்டுமென்று இந்த அரசு விரும்பினாலும் கூட மத்திய அரசிடமிருந்து 1981 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 31 ஆம் நாள் வரையில் தேர்தல்கள் நடத்தக் கூடாது என்ற கருத்துக்கள் அடங்கிய கடிதங்கள் பல வந்துக் கொண்டிருக்கின்றன. 1981 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 31 ஆம் நாள் வரையில் புதிய நகராட்சிகள், உள்ளாட்சி மன்றங்கள் சேர்க்கக் கூடாது என்றும் உத்தரவு போடப்பட்டிருக்கிறது. ஜனத் தொகை கணக்கெடுப்பு நடந்து கொண்டிருக்கிறது, இந்தக் காரணங்களால்தான் தள்ளிப் போடப்பட்டு வருகின்றன. இந்த அரசுக்கு வேண்டுமென்றே நகராட்சி உள்ளாட்சி மன்றங்கள் தேர்தலைத் தள்ளிப் போட வேண்டுமென்ற எண்ணம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

திரு. கோவைத்தம்பி : பேரவைத் தலைவர் அவர்களே, வரும் உள்ளாட்சித் தேர்தலில் அடையாள அட்டைகள் பயன் படுத்தப் போவதில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார் கள். இந்தக் கேள்விக்குத் தொடர்பு இல்லையென்றாலும் பதில் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். புதிதாக வாக் களிக்கும் முறையைத் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒருவர் கண்டு பிடித்திருக்கிறார். அது பொருட்காட்சியிலே கூட வைக்கப் பட்டிருக்கிறது. அந்த முறையைத் தமிழ் நாட்டிலே பயன்படுத்து வதற்கு முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இயந்திரத்தின் மூல மாக வாக்களிக்கின்ற முறையை திரு. ஹனீபா என்பவர் கண்டு பிடித்திருக்கிறார், அதைப் பொருட்காட்சியிலே ஸ்டாலிலே வைத் திருக்கிறார். இவைகளை எல்லாம் அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்].

(2) உரிமைப் பிரச்சினைகள்

(அ) பேரவை உறுப்பினரைக் காவல் துறையினர் தாக்கியதாகச் சொல்லப் பெறுவது—தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து திரு. நா. சுந்தர ராஜ் அவர்கள் 1981-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 29-ஆம் நாள் பேரவையில் எழுப்பிய உரிமைப் பிரச்சினை மீது எனது தீர்ப்பை வழங்குகிறேன்.

திரு. நா. சுந்தரராஜ் அவர்கள் ஜனவரி திங்கள் 24-ஆம் நாள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 246-ன் கீழ், கீழ்க் கண்ட உரிமைப் பிரச்சினைக்கான அறிவிப்பைக் கொடுத்தார் கள். அறிவிப்பில் தெரிவித்துள்ள தகவல்களுக்கு உறுப்பினர் அவர்கள் பொறுப்பு ஏற்றுக் கொள்கிறார்களா என்று அறியும் பொருட்டு, எனது ஆணைக்கு ஏற்ப பேரவைத் துறையிலிருந்து உறுப்பினருக்கு 1981-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 27-ஆம் நாளன்று கடிதம் ஒன்று அனுப்பப் பெற்றது. ஆனால் அவ்வாறு உறுப்பினரைக் கேட்பது சரியல்ல. உறுப்பினர்கள் கொடுக்கும் அறிவிப்புகள் எல்லாம் அவர்கள் பொறுப்பு ஏற்றுக்கொண்டு